கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்) தென்காசி

முன்னிலை:– திரு. எஸ். மனோஜ்குமார், எம்.ஏ., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, தென்காசி.

2025 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 26 ஆம் நாள் வியாழக்கிழமை

**நிறைவேறுதல் மனு எண்.12/2022**
அதன்
**ஏ.ஆர்.பி எண்.86/2020**
( CNR No.TNTS 01 000197 2022 )

மெசர்ஸ் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்,
அதன் அதிகாரம் பெற்ற முகவர் எஸ். சுரேந்திரன் மூலம்
. . . மனுதாரர்/
தீர்ப்பாணை பெற்றவர்/வாதி

..எதிர்..

1. பரமேஸ்வரி
2. ஹரிகிருஷ்ணன் . . . எதிர்மனுதாரர்/
தீர்ப்பு கடனாளி/பிரதிவாதி

இந்த நிறைவேறுதல் மனுவானது 25.06.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.முருகானந்தம் அவர்களும், 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.புகழ்வேந்தன் அவர்களும் முன்னிலைாகியுள்ள நிலையில் 1 வது எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்டும், 1 வது எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பாராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையிலும், வழக்கானது எதிர்மனுதாரர் தரப்பு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த சமயத்தில், 2 வது எதிர்மனுதாரர் ஆஜராகாத காரணத்தால், எதிர்மனுதாரர் தரப்பு வாதமானது முடிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இந்த நிறைவேறுதல் மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 21 விதி 11–ன் கீழ், பிரதான வழக்கில் 10.10.2020 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின்படி மனுதாரருக்கு, எதிர்மனுதாரர்களிடமிருந்து வரவேண்டிய தொகையை வசூலிக்க ஏதுவாக 2 வது எதிர்மனுதாரருக்குப்

பாத்தியப்பட்ட ஏற்கனவே ஜப்தி செய்யப்பட்டுள்ள தபசில் சொத்தை நீதிமன்றம் மூலம் ஏல நடவடிக்கை எடுத்து ஏலத்தில் வசூல் ஆகும் தொகையை தீர்ப்பாணை தொகைக்கு ஈடு செய்துகொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>:–

இம்மனுவின் மனுதாரர் பிரதான ஏ.ஆர்.பி.வழக்கு எண்.86/2020–ல் வாதி ஆவார். மேற்படி வழக்கில், 10.10.2020 ஆம் தேதியன்று மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு ரூ.35,76,450/– செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகையை எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு செலுத்தத் தவறிவிட்டார்கள். எனவே மேற்படி தொகையையும் மற்றும் செலவுத்தொகை ரூ.1,120/– சேர்த்து மொத்தம் ரூ.35,77,570/– வசூலிக்க ஏதுவாக இந்த நிர் 2 வது எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ஏற்கனவே ஜப்தி செய்யப்பட்டுள்ள தபசில் சொத்தை நீதிமன்றம் மூலம் ஏல நடவடிக்கை எடுத்து கிடைக்கும் தொகையை தீர்ப்பாணை தொகைக்கு ஈடு செய்து கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 1 வது எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்டும், 1 வது எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பாராக தீர்மானிக்கப்பட்டுள்ளார்.

4. <u>2 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>

மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லக் கூடியதல்ல. பிரதான ஏர்.ஆர்.பி வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணையானது ஒருதலைபட்ச தீர்ப்பாணையாகும். 1 வது எதிர்மனுதாரரால் பெறப்பட்ட கடனுக்காக 1 வது எதிர்மனுதாரர் அவரது வாகனத்தை ஒப்படைப்பு செய்துவிட்டார். மேற்படி விவரத்தை மறைத்து மனுதாரரால் தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது. 1 வது எதிர்மனுதாரர் பெற்ற கடனுக்கு 1 வது எதிர்மனுதாரரின் சொத்துக்களை ஜப்தி செய்யாமல் 2 வது எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை ஜப்தி செய்ய கோர இயலாது எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் "மனு அனுமதிக்கக் கூடியதா?"

என்பதே ஆகும்.

6. இம்மனுவில் இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

7. <u>**பிரச்சனைக்கான தீர்வு**</u>:–

இந்த மனுவின் மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், மனுதாரர் பிரதான ஏ.ஆர்.பி.வழக்கு எண்.86/2020–ல் வாதி என்றும், மேற்படி வழக்கில், 10.10.2020 ஆம் தேதியன்று மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு ரூ.35,76,450/– செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், மேற்படி தொகையை எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு செலுத்தத் தவறிவிட்டதாகவும், எனவே மேற்படி தொகையையும் மற்றும் செலவுத்தொகை ரூ.1,120/–ம் சேர்த்து மொத்தம் ரூ.35,77,570/– வசூலிக்க ஏதுவாக இந்த நிர் 2 வது எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட ஏற்கனவே ஜப்தி செய்யப்பட்டுள்ள தபசில் சொத்தை நீதிமன்றம் மூலம் ஏல நடவடிக்கை எடுத்து கிடைக்கும் தொகையை தீர்ப்பாணை தொகைக்கு ஈடு செய்து கொள்ள வேண்டியது அவசியம் என்றும் வாதிட்டிருக்கிறார்.

8. 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் பிரதான ஏர்.ஆர்.பி வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணையானது ஒருதலைபட்ச தீர்ப்பாணை என்றும், 1 வது எதிர்மனுதாரால் பெறப்பட்ட கடனுக்காக 1 வது எதிர்மனுதாரர் அவரது வாகனத்தை ஒப்படைப்பு செய்துவிட்டதாகவும், மேற்படி விவரத்தை மறைத்து மனுதாரரால் தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது என்றும், 1 வது எதிர்மனுதாரர் பெற்ற கடனுக்கு 1 வது எதிர்மனுதாரரின் சொத்துக்களை ஜப்தி செய்யாமல் 2 வது எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை ஜப்தி செய்ய கோர இயலாது என்றும் எதிருரையில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

9. வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த மனுவின் மனுதாரர், ஏ.ஆர்.பி வழக்கினை எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அடமானக் கடன் பேரில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் கடந்த 10.10.2020 ஆம் தேதியன்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணையின் படி எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு

மொத்தம் ரூ.35,76,450/- செலுத்த வேண்டுமென்று கண்டுள்ளது. ஆனால் எதிர்மனுதாரர்கள் மேற்படி தொகையை மனுதாரருக்கு ஒப்புக்கொண்டபடி செலுத்தாத காரணத்தால் 2 வது எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட ஏற்கனவே ஜப்தி செய்யப்பட்டுள்ள தபசில் சொத்தினை ஏல நடவடிக்கைக்கு உத்தரவிடுமாறு மனுதாரரால் கோரப்பட்டுள்ளது. 1 வது எதிர்மனுதாரர் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார். 2 வது எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரரிடம் கடன் பெற்றவர் 1 வது எதிர்மனுதாரர் என்றும், மேற்படி கடனுக்கு 1 வது எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட வாகனமானது ஏற்கனவே 1 வது எதிர்மனுதாரரால் ஒப்படைக்கப்பட்டுவிட்டது என்றும், எனவே 2 வது எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தைப் பொறுத்து எந்தவித உத்தரவும் கோர இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆவணங்களைப் பரிசீலனை செய்ததில், மனுதாரரிடம், 1 வது எதிர்மனுதாரர் பெற்ற கடனுக்கு ஜாமின்தாரராக 2 வது எதிர்மனுதாரர் பத்திரம் பிறப்பித்துக் கொடுத்துள்ள காரணத்தால் பிரதான வழக்கில் எதிர்மனுதாரர்கள் இருவரிடமிருந்தும் 1 வது எதிர்மனுதாரர் பெற்ற கடன் தொகையை வசூலிக்க மனுதாரருக்கு உரிமை உள்ளதாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும், 1 வது எதிர்மனுதாரர் தோன்றாதரப்பாராகியுள்ள நிலையில், பற்றுகை செய்யப்பட்டுள்ள சொத்தானது 2 வது எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டதில்லை என்று 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை. எனவே 1 வது எதிர்மனுதாரர் பெற்ற கடனுக்கு 2 வது எதிர்மனுதாரர் ஜாமின் பத்திரம் பிறப்பித்து கொடுத்துள்ள நிலையில், 2 வது எதிர்மனுதாரரும் மனுதாரருக்கு செலுத்த வேண்டிய கடன்தொகையை செலுத்தக் கடமைப்பட்டவர் என்பதால் 2 வது எதிர்மனுதாரருக்குப் பாத்தியப்பட்ட சொத்தானது ஏற்கனவே பற்றுகை செய்யப்பட்டுள்ள நிலையில், மனுத் தபசில் சொத்தினை ஏலம் விட்டு கிடைக்கும் தொகையை தீர்ப்பாணை தொகைக்கு ஈடு செய்துகொள்ளக்கோரி மனுதாரர் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரருக்கு கிடைக்கக் கூடியது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவில், இம்மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. Sale papers by 28.07.2025.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 26 ஆம் நாளான இன்று அவையறியப் பகரப்பட்டது.

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2025.06.26 15:33:10 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

**<u>மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u>**

இல்லை

MANOJKUMAR S Digitally signed by MANOJKUMAR S Date: 2025.06.26 15:33:18 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
தென்காசி

---

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், தென்காசி
நிறைவேறுதல் மனு எண்.12/2022
அதன்
அசல் வழக்கு எண்.86/2020
உத்தரவு (நேரிய)
நாள்: 26.06.2025

---